| | | | | | |
|---|---|---|---|---|---|
| **வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை**<br>இணைந்து வழங்குபவர்கள்<br>பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை<br>ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்<br>ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் | | | | | |
| மாவட்டம் : | **தேனி** | காலம் : | **14/02/2024** | முதல் | **18/02/2024** |
| அறிக்கை எண் : | **013/ 2024** | வெளியீட்டு நாள் : | **13/02/2024** | | |

## தேனி மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 34°-36° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 22° - 23° செல்சியஸ் ஆகவும் பதிவானது.

| கடந்தவார வானிலை (08.02.2024 **முதல்** 12.02.2024) | | | | | | **அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு – 18-02-22024- 08.30 வரை** | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 08/02 | 09/02 | 10/02 | 11/02 | 12/02 | **தேதி** | **நாள்-1** 14/02 | **நாள்-2** 15/02 | **நாள்-3** 16/02 | **நாள்-4** 17/02 | **நாள்-5** 18/02 |
| 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | மழை (மி.மீ) | 0 | 0 | 0 | 0 | 0 |
| 35 | 36 | 34 | 34 | 35 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 30 | 30 | 29 | 30 | 30 |
| 21 | 22 | 22 | 23 | 22 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 23 | 22 | 22 | 23 | 22 |
| 2 | 2 | 3 | 3 | 3 | மேக மூட்டம் (ஆக்டா) | 3 | 4 | 4 | 2 | 2 |
| 82 | 88 | 81 | 86 | 70 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 90 | 90 | 80 | 90 | 90 |
| 37 | 47 | 43 | 44 | 45 | | 50 | 50 | 40 | 50 | 50 |
| 9 | 9 | 12 | 12 | 14 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 8 | 10 | 8 | 8 | 8 |
| கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு | கிழக்கு | வட கிழக்கு | காற்றின் திசை | **வட கிழக்கு** | **வட கிழக்கு** | **வட கிழக்கு** | **வட கிழக்கு** | **வட கிழக்கு** |

## குறுஞ்செய்தி :

அடுத்த 5 நாட்களுக்கு வறண்ட வானிலையே நிலவ வாய்ப்பு. அதிகபட்ச வெப்பநிலையானது 29°-30° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 22°-23° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் மிதமான மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 8 முதல் 10 கி.மீ வேகத்தில், வடகிழக்கு திசையிலிருந்து காற்று வீசக்கூடும்.

## பொது ஆலோசனை:

அடுத்த 5 நாட்களுக்கு வறண்ட வானிலையே நிலவ வாய்ப்பு உள்ளதால், விவசாயிகள் உங்கள் மண்ணின் ஈரப்பதத்தின் அடிப்படையில் பயிர்களுக்கு நீர்ப்பாசனம் செய்யவும்.

அதிகாலை நேரங்களில் மூடுபனி நிலவ வாய்ப்புள்ளதால், உங்கள் கால்நடைகளை சூரிய உதயத்திற்கு *2* மணி நேரத்திற்குப் பிறகு மட்டுமே மேய்ச்சலுக்கு அனுமதிக்கவும்.

அடுத்த 5 நாட்களுக்கு மணிக்கு 8 முதல் 10 கி.மீ. வேகத்தில் காற்று வீசும் என எதிர்பார்க்கப்படுவதால் விவசாயிகள் கரும்பு, வாழை, பப்பாளி, கொய்யா, முருங்கை போன்ற பயிர்களுக்கு மண் அனைத்தல், முட்டுகொடுத்தல், விட்டம் கட்டுதல் போன்ற பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்க்கொள்ளவும். கொடிவகை பயிர்களில் பந்தல்களில் துருபிடித்து

கொடுக்கவும். பயிர்களுக்கு மருந்து தெளிக்கும் வேலைகளை ஒத்திவைக்கவும்

**அடுத்த வாரத்திற்கான விரிவாக்கபட்ட வரம்பு வானிலை முன்னறிவிப்பு (16 முதல் 22 பிப்ரவரி 2024):**

**மழைப்பொழிவு :**

நீட்டிக்கப்பட்ட வரம்பு கணிப்புகளின்படி, வரும் 9 பிப்ரவரி முதல் 22 பிப்ரவரி வரையிலான காலகட்டத்தில் மாவட்டத்தில் ஒரு சில இடங்களில் இயல்பை விட குறைந்தது முதல் இயல்பை ஒட்டிய லேசான மழைக்கு வாய்ப்பு உள்ளது

**அதிகபட்ச வெப்பநிலை :**

16 பிப்ரவரி முதல் 22 பிப்ரவரி வரையிலான காலகட்டத்தில் மாவட்டத்தில் அதிகபட்ச வெப்பநிலையானது இயல்பானது முதல் இயல்பை விட சற்று அதிகரித்து காணப்படும். 30° செல்சியஸ் முதல் 34° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு

**குறைந்தபட்ச வெப்பநிலை :**

16 பிப்ரவரி முதல் 22 பிப்ரவரி வரையிலான காலகட்டத்தில் மாவட்டத்தில் குறைந்தபட்ச வெப்பநிலையானது இயல்பானது முதல் இயல்பை விட சற்று அதிகரித்து காணப்படும்.18° செல்சியஸ் முதல் 22° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**

**முக்கிய பயிர்கள் : கரும்பு, மா, கால்நடை.**

**கரும்பு:**

கரும்பு பயிரில் சாம்பல் நிற வண்டு தாக்குதல் பரவலாக தென்படுகின்றது. தாக்குதலின் அறிகுறியாக இலைகள் மஞ்சள் நிறமடைந்து வாடி சருகு போன்று மாறிவிடும்.

குருத்துப் பகுதி முழுவதும் காய்ந்து விடும். வேர் மற்றும் அடிக் குருத்து பகுதியில் இவ்வகை வண்டுகள் பெரும் சேதத்தினை ஏற்படுத்தும். பாதிக்கப்பட்ட கரும்புகள் வேரற்று கீழே சாய்ந்து விடும்.

இதனைக் கட்டுப்படுத்த 10 லிட்டர் தண்ணீரில் 25மிலி பிப்ரோனில் 5சதம் எஸ்.சி தெளிக்கவும்.

**மா:**

மாவில் பூ, பிஞ்சுகள் உதிர்வது மற்றும் காய்ப் பிடிக்கும் திறனை அதிகரிக்க செய்வது முக்கியமானதாகும். என்.ஏ.ஏ என்ற வளர்ச்சி ஊக்கி மருந்தை 20 பி.பி.எம் என்ற அளவில் இரண்டு முறை தெளிக்க வேண்டும்.

இவ்வாறு தெளிப்பதால் பிஞ்சுகள் உதிர்வது தடுக்கப்பட்டு காய்ப் பிடிப்பு அதிகரிக்கும்.

பூ பூக்காத மரங்களுக்கு 1லிட்டர் தண்ணீருக்கு 5 கிராம் யூரியா அல்லது 1லிட்டர் தண்ணீருக்கு 10 கிராம் பொட்டாசியம் நைட்ரேட் என்ற விகிதத்தில் கரைசல் தயாரித்து ஏதேனும் ஒன்றை தெளிக்க வேண்டும்.

**கால்நடை:**

தற்போது நிலவும் வானிலையில் மாடுகளை அடைப்பான் நோய் தாக்க வாய்ப்பு உள்ளது. இந்நோய் தாக்கப்பட்ட மாடுகளுக்கு காய்ச்சல் இருக்கும். மாடுகளில் உணர்வு இழப்பு ஏற்பட்டு பிறகு இறந்து விடும்.

இந்நோயில் இருந்து தங்கள் கால்நடைகளைக் காப்பாற்ற வருடத்திற்கு ஒரு முறை அருகில் உள்ள கால்நடை மருத்துவரை அணுகி அடைப்பான் நோய்க்கான தடுப்பூசிகளை போட  வேண்டும்.